**49. அரிச்சந்திரன் கதை (1)**

அரிச்சந்திரன் என்பவன் கதிரவன் குலத்தில் தோன்றிய திரிசங்கு என்பவனுடைய புதல்வன். அறநெறியில்தவறாதவன். பொய்யுரை புகலாமையால் மிகுந்த புகழ் பெற்று விளங்கினான். இவன் இருந்து அரசு



புரிந்தது அயோத்தியில் என்பர். ஒரு காலத்தில் தேவர்களுடைய அவையில் அரிச்சந்திரனைப் பற்றிப் பேச்சு உண்டாகியது. ஒருவர் அரிச்சந்திரன் பொய் பேசுவான் என்றார். மற்றவர் அரிச்சந்திரன் பொய் பேசமாட்டான்என்றார். பொய் பேசுவான் என்றவர் அதனை மெய்ப்பிக்க வேண்டியதாயிற்று. அரிச்சந்திரனுக்கு அல்லல்கள் பலவற்றை உண்டாக்கி அவனைப் பொய்யனாக்குவதற்குப் பெரிதும் முயன்றார். எதற்கும் அரிச்சந்திரன்கலங்கவில்லை. நாட்டையும் மனைவி மக்களையும் இழக்க நேரிட்டபோதும் மனந்தளரவில்லை. அரிச்சந்திரன்பறையனுக்கடிமை யாகிச் சுடலைகாக்க நேரிட்டபோதுகூடத் தன் கொள்கை யில் தளராதவனாக இருந்தான். அரிச்சந்திரன் பொய் பேசுவான் என்று கூறியவர் தவத்தினை இழந்து சிறுமையடைய நேரிட்டது. தமது அரிச்சந்திரனுக்கு ஏற்பட்ட சிறுமைகளை உலகத்தார் ஒரு சிறுமையாக மதிக்கவில்லை, பெருமையாகவே கொண்டு போற்றினார்கள். நல்வழியிலே நின்று தாழ்வடைந்தனுடையதாழ்வை உலகத்தார் ஒரு தாழ்வாக மதிக்கமாட் டார்கள்,உயர்வாகவே மதிப்பார்கள் என்பது அந்நாளில்அரிச்சந்திரனிடத்தில் நன்கு விளங்கியது.

(அரிச்சந்திர புராணம்)

[அறநெறியில் நேர்ந்த தாழ்வு]